# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2152/60 - 2019 දෙසැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2019.12.06

*2152/60 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2 அ ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, அக்கட்டளையின் 3 ஆம் பந்தியின் பின்னர் அடுத்து வருமாறு பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

"4.1 (அ) பந்தியின் நோக்கத்திற்காக :

(i) "மொத்த உள்ளீட்டுப் பெறுமதி" என்பது, பூச்சிய (0%) வரி வீதத்திற்கான வரி விதிப்புக் காலத்திற்குக் கிட்டிய அண்மையில் வரி விதிப்புக் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் முடிவடையும் வரி விதிப்புக் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தக் கொள்வனவுகளின் பெறுமதி ஆகும்.

(ii) "உள்நாட்டு வழங்கல்கள்/மூலங்களிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள்" என்பது, பூச்சிய (0%) வரி வீதத்திற்கான வரி விதிப்புக் காலத்திற்குக் கிட்டிய அண்மையில் வரி விதிப்புக் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் முடிவடையும் வரி விதிப்புக் காலப்பகுதியில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாய, தோட்டம் சார்ந்த, மீன்பிடி, விலங்கு வளர்ப்பு அல்லது பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் குறைந்தபட்சம் 10% உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கையுடனான உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் ஆகும்."

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2019, திசெம்பர் 05.

12-742


1A - PG 4813 — 542 (2019/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.